## குற்றவியல் நீதியும் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டோரும்: முக்கியமான சில கேள்விகளும் அதற்கான பதில்களும்.

அமெரிக்காவில் குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய பல வழிமுறைகள் உள்ளன. ஆனால், இந்த தேசத்தில் குடிபுகுந்தவர்கள் அந்த உதவியை நாடுவதற்கு பல இடையூறுகளும் உள்ளன. அமெரிக்காவின் கலாச்சாரத்திற்கும், பாதிக்கப்பட்டவர்களின் தேச கலாச்சாரத்திற்கும் உள்ள வித்தியாசங்கள் ஒரு முக்கிய காரணம். சான் பிரான்சிஸ்கோ விரிகுடா பகுதியில் உள்ள இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் முதலிய தெற்காசிய தேசத்தில் இருந்து குடிபுகுந்தவர்கள் எதிர்கொள்ளும் குடும்ப வன்முறையிலிருந்து குற்றவியல் நீதி உதவி பெற மைத்ரி உதவி செய்கிறது. சிலிகான்வாலி (Silicon Valley) இலவச உதவி (Pro Bono Project) திட்டமும், மைத்ரியும் சேர்ந்து குற்றவியல் நீதி சம்பந்தமான விஷயங்களுக்கு அளிக்கும் உதவியைப் பற்றிய சில கேள்விகளுக்கு இங்கே பதில் உள்ளன. இவை சட்டபூர்வமான அறிவுரை அல்ல. குடும்ப வன்முறை பற்றிய பொதுவான தகவல்.

இதன்மூலம் நாங்கள் ஒத்துக்கொள்வது என்னவென்றால்:

- தனிப்பட்ட நபர் ஒவ்வொருவருக்கும் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு என்ன விருப்பமோ அதை தேர்வு செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு
- நீதிமன்றத்தின் செயல்முறைகளில் கலந்து கொள்ளும் சமயம் உணர்ச்சி, நிதி, குடிபுகல், கலாச்சாரம் முதலிய காரணங்களால் பல்வேறு தடைகள் வர வாய்ப்பு உள்ளது
- குடும்ப வன்முறையிலிருந்து தப்பியவர்கள் தங்களுடைய விருப்பங்கள் நியாயமானவை என்று வழக்கறிஞர்களிடம் கூற அவசியமில்லை
- ஒரு விஷயத்தைப் பற்றி நன்றாக தெரிந்துகொள்வது அதைப் பற்றி நல்ல முடிவுகளை தேர்வு செய்ய உதவும். இந்த கேள்வி பதில் கட்டுரை மைத்ரியை அணுகிய பல்வேறு நபர்களுடைய அனுபவங்களில் இருந்து உருவானவை.

* குடும்ப வன்முறையில் இருந்து தப்பித்தவர்கள் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியாக செல்வதற்கு முன் தெரிந்துகொண்டால் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்துடன் மைத்ரியும், சிலிகான்வாலி (Silicon Valley) இலவச உதவி (Pro Bono Project) திட்டமும் சேர்ந்து இந்த கேள்வி / பதில் கட்டுரையை தயார் செய்துள்ளது.

**1. நான் சாட்சி சொல்வது அவசியமா? சாட்சி சொல்லாவிட்டால் என்ன நடக்கும்?**

நீங்கள் சாட்சி அளிப்பது சில சமயம் அவசியம். உங்களுடைய மாவட்ட உதவி வழக்கறிஞருடன் (Assistant District Attorney) கலந்து ஆலோசித்து சாட்சி அளிப்பதை பற்றி முடிவு செய்யுங்கள். உங்களுக்கு சாட்சி அளிப்பதில் தயக்கமோ, பயமோ இருந்தால் அவரிடம் தெரியப்படுத்துங்கள். உங்களுடைய விருப்பங்களை அறிந்து உங்களுடைய வழக்கை நடத்த அவர்களுக்கு அது உதவியாக இருக்கும்.

**2. என்னுடைய கணவனோ/மனைவியோ குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டால் அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படுவார்களா?**

இந்த தேசத்தில் குடிபுகல் சம்பந்தமான கேள்விகளுக்கு பொதுவாக ஆம் / இல்லை என்று எளிதாக விடை தர முடியாது. தேசத்தில் இருந்து வெளியேற்றப் படுவது என்பது குடிபுகுந்த ஒருவரைப் பொறுத்தவரை மிகவும் கடுமையான தண்டனை. அமெரிக்கா தேசத்தில் இருந்து உங்களுடைய கணவனோ / மனைவியோ வெளியேற்றப்படுவாரா இல்லையா என்பது அவர் செய்த குற்றங்களை பொறுத்தது. மேலும், இந்த வழக்கில் அவர்கள் குற்றவாளி என்று நீதிபதி வாக்களிக்க வேண்டும். அதன் பின், குடிபுகல் நீதிபதி ஒருவரும் இதைப் பற்றி மீண்டும் விசாரிப்பார். உங்களுக்கு இதைப் பற்று மேலும் தெரிந்து கொள்ள ஒரு வழக்கறிஞரை அணுகுங்கள்.

**3. என்னுடைய கணவனுக்கோ/மனைவிக்கோ சிறைத் தண்டனை கிடைக்குமா?**

சிறைத் தண்டனை என்பது அவர்கள் செய்த குற்றத்தை பொறுத்தது. ஒருவருடைய குற்றத்தைப் பொறுத்து அவருக்கு அபராதமோ, சோதனைக் கால கட்டுப்பாடுகளோ (probation), சிறைத் தண்டனையோ கிடைக்கும்.

**4. நீதிபதி என்னை நம்பவில்லை என்றால் என்ன நடக்கும்?**

அப்படிப்பட்ட ஒரு நிலை வந்தால் ஒருவர் செய்த குற்றத்தை நிரூபணம் செய்ய வேறு வழிமுறைகள் உள்ளன.

**5. என்னை துன்புறுத்தியவரின் முன்னிலையில் நான் சாட்சி சொல்வது அவசியமா?**

திறந்த நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையில் சாட்சி அளிப்பது வழக்கம். உங்களுடன் உங்களுடைய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இருப்பதற்கு

அனுமதி உள்ளது. மேலும், சாட்சி அளிப்பவரே மிரட்டுவது குற்றம். குற்றம் சாட்டப்பட்டவர் உங்களை மிரட்டினால் நீங்கள் அதைப் பற்றி உடனே தெரியப்படுத்த முடியும்.

தற்பொழுது கொரோனா வைரஸ் நோய் பரவலாக உள்ள சமயத்தில் நீதி மன்றம் நேரிடையாக நடக்காமல் வீடியோ மூலம் நடக்க வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நடந்தால் உங்களை துன்புறுத்தியவரும் நீங்களும் ஒரே அறையில் இருக்க அவசியம் இல்லை. ஆனால் நீங்கள் கலந்திருக்கும் வீடியோ சந்திப்பில் உங்களைத் துன்புறுத்தியவரும் இருக்க வாய்ப்பு உள்ளது என்பதை நினைவு கூறுங்கள்.

### 6. என்னை துன்புறுத்தியவரை தண்டிக்க வேண்டாம் என்று நான் நீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ள முடியுமா?

ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது எந்த மாதிரி நடவடிக்கை எடுக்க விரும்புகிறீர்கள் என்று உங்களுடைய எண்ணங்களை மாவட்ட வழக்கறிஞரிடம் கூறலாம். உங்களுடைய விருப்பங்களுக்கு இணங்க குற்றம் சாட்டப்பட்டவர் மீது நடவடிக்கை எடுப்பதோ, எடுக்காததோ மாவட்ட வழக்கறிஞரின் உசிதத்தைப் பொறுத்தது.

[மேலே கூறியபடி, ஒருவருடைய குற்றத்தைப் பொறுத்து அவருக்கு அபராதமோ, சோதனைக் கால கட்டுப்பாடுகளோ (probation), சிறைத் தண்டனையோ கிடைக்கும்.]

### 7. என்னை துன்புறுத்தியவரை தண்டிக்காமல், அவரை மன்னித்து, நல்ல முறையாக நடக்க வேண்டும் என்ற வாய்ப்பை அளிக்குமாறு நான் நீதிமன்றத்தில் கேட்டுக்கொள்ள முடியுமா?

ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் குற்றம் சாட்டப்பட்டவர் மீது எந்த மாதிரி நடவடிக்கை எடுக்க விரும்புகிறீர்கள் என்று உங்களுடைய எண்ணங்களை மாவட்ட வழக்கறிஞரிடம் கூறலாம். உங்களுடைய விருப்பங்களுக்கு இணங்க குற்றம் சாட்டப்பட்டவர் மீது நடவடிக்கை எடுப்பதோ, எடுக்காததோ மாவட்ட வழக்கறிஞரின் உசிதத்தைப் பொறுத்தது.

உங்களை துன்புறுத்தியவர் குற்றவாளி என்று நிரூபணம் ஆனால் நீங்கள் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் ஒரு அதன் விளைவுகளைப் பற்றி கூற ஒரு வாய்ப்பு உள்ளது. அந்த வாக்குமூலத்தை நீங்கள் எழுதி அதை நீதிபதியிடமோ, மாவட்ட வழக்கறிஞரிடமோ கொடுக்கலாம். இல்லையென்றால் நீதி மன்றத்தில் நீங்களே அதை எல்லோருக்கும் கேட்கும் வண்ணம் உரக்கப் படிக்கலாம்.

8. **நான் போலீஸைக் கூப்பிடவில்லை. மேலும், எனக்கு ஒரு வித பாதுகாப்பும் தேவை இல்லை. நான் என்ன செய்ய வேண்டும்?**

குடும்ப வன்முறையைப் பற்றி யார் வேண்டுமானாலும் போலீஸிடம் புகார் கொடுக்கலாம். உங்களுடைய அண்டை வீட்டுக்கார், நண்பர், தனிப்பட்ட நபர் யார் வேண்டுமானாலும் தாங்கள் பார்த்த சம்பவத்தை போலீஸிடம் தெரியப்படுத்தலாம். சம்பவம் நடக்கும் இடத்திற்கு வரும் போலீஸார் அவசர கால பாதுகாப்பு வேண்டுமென்றால் அதை அளிக்க ஏற்பாடு செய்வார்கள். உங்களுக்கு அப்படிப்பட்ட பாதுகாப்பு தேவை இல்லை என்றால் நீங்கள் சம்பத்தை விசாரிக்க வந்துள்ள போலீஸாரிடம் தெரியப்படுத்தலாம். ஒரு வேளை உங்களை துன்புறுத்துவோர் கைது செய்யப்பட்டால், உங்கள் அருகில் வர அனுமதி இல்லை என்று நீதிமன்றம் உத்தரவிடும். அந்த உத்தரவை நீதிமன்றத்தின் உதவியுடன் மாற்ற முடியும்.

மேற்கொண்ட விபரங்கள் இந்த இணைப்பில் உள்ளன.
https://www.scscourt.org/self_help/restraining/crim_ro.shtml

9. **நான் என்னுடைய கணவன்/மனைவிக்கு எதிராக சாட்சி அளிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். எனக்கு தனிப்பட்ட வழக்கறிஞரின் உதவி அவசியமா?**

தேவை இல்லை. ஆனால், நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் சட்டபூர்வமான அறிவுரையை நாடலாம்.

10. **நீதிமன்றத்தில் வழக்கு எவ்வளவு நாட்களுக்கு நடக்கும்?**

ஒவ்வொரு வழக்கும் தனிப்பட்ட முறையில் விசாரிக்கப்படும். உங்களுடைய வழக்கு எவ்வளவு நாட்கள் நடக்கும் என்று அறிந்து கொள்ள உங்களுடைய மாவட்ட வழக்கறிஞரின் அலுவலகத்தை அணுகுங்கள்.

11. **CPS / DFCS அலுவலகத்தில் இருந்து போன் வந்தால் நான் என்ன செய்ய வேண்டும்?**

குழந்தைகள் உள்ள வீட்டில் குடும்ப வன்முறை நடக்கும் பட்சத்தில் போலீசார் சம்பவத்தைப் பற்றி விசாரித்த விஷயங்கள் CPS / DFCS அலுவலகங்களுக்கு தெரியப்படுத்திடுவார். தேவைப்பட்டால் CPS / DFCS குழந்தைகளின் நலத்தை கருதி பாதிக்கப்பட்டோரை அணுகுவார். உங்களுக்கு ஆதரவு அளிக்கும் அலுவலகத்தாரிடம் இதைப் பற்றி பேசுங்கள்.

**12. என்னைத் துன்புறுத்தியவர் அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். என்னுடைய குழந்தைகள் அவருடன் இந்த தேசத்தை விட்டு செல்லப்போகிறார்கள். நான் என்ன செய்ய முடியும்?**

குழந்தைகளின் பாதுகாப்பு குடும்ப சட்டங்களுக்கு கட்டுப்பட்டது. குடும்ப சட்டங்களுக்கும், குடிபுகல் சட்டங்களுக்கும் தொடர்பு இல்லை. இதற்கு தெளிவான பதில் கிடைக்க நீங்கள் குடும்ப சட்டத்தைப் பற்றி நன்கு அறிந்த வக்கீலிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

**13. என்னைத் துன்புறுத்தியவருக்கு சான்டா கிளாரா கவுன்டியில் (Santa Clara County) டைவர்ஷன் (diversion) என்ற தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்ன?**

டைவர்ஷன் (diversion) என்ற தண்டனை கொடுக்கப்பட்ட குற்றவாளிகள் சோதனைக் கால கட்டுப்பாடுகளுடன் (probation) பல்வேறு வகுப்பில் சேர்ந்து தன்னை திருத்திக்கொள்ள வேண்டும். இதைப் பற்றி இன்னும் அறிந்துகொள்ள உங்களுடைய மாவட்ட வழக்கறிஞரின் அலுவலகத்தை அணுகுங்கள்.

**14. என்னுடைய குழந்தைகள் சாட்சி அளிக்கவேண்டும் என்று கேட்பார்களா?**

பொதுவாக, குழந்தைகளின் வயதைப் பொறுத்து, அவர்கள் சாட்சி அளிக்க அவசியம் இருக்காது.

**15. நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் என்ன நடக்கும்?**

வழக்கில் சாட்சி சொல்வதற்கு அழைப்பு (subpoena) வந்தால் நீங்கள் நீதிமன்றத்திற்கு வருவது அவசியம். அவ்வாறு வரவில்லை என்றால் நீதிமன்றம் warrant என்ற ஆணைப்பத்திரத்தை அனுப்பி உங்களை வரவழைக்கும். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பு வந்தால் நிச்சயம் நீங்கள் வந்துதான் ஆகவேண்டும்.

**16. என்னுடைய குடியேற்றல் நிலை இதனால் பாதிக்கப்படுமா?**

குடியேற்றம் என்பது மிகவும் சிக்கலான விஷயம். இதற்கு தெளிவாக பதில் சொல்வது எளிதல்ல. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் குடியேற்றல் விஷயங்களில் உதவி கோர வசதி உள்ளது. இது வழக்கை நடத்துவதற்கு நீங்கள் அளிக்கும் ஒத்துழைப்பை பொறுத்தது. உங்களுக்கு ஆதரவு அளிக்கும் அலுவலகத்தாரிடம் இதைப் பற்றி பேசுங்கள்.

**17. குடும்பப் பிரச்சனைகளை விசாரிக்கும் நீதிமன்றம் (Family Court) குழந்தைகளைப் பார்க்க அனுமதி உள்ளது என்று தீர்ப்பு அணித்துள்ளது. குற்றவியல் நீதிமன்றம் எனக்கு பாதுகாப்பு தேவை (CPO) என்று உத்தரவு செய்துள்ளது. இந்தப் பாதுகாப்பு உத்தரவை மாற்றுவது என்னுடைய பொறுப்பா?**

இல்லை. ஆனால் குழந்தைகளை பார்க்க வேண்டுமென்றால் இந்த பாதுகாப்பு உத்தரவை (CPO ) மாற்ற வேண்டும். நீங்களோ, உங்களுக்கு எதிர் தரப்பில் உள்ளவரோ இந்த உத்தரவை மாற்ற அனுமதி கேட்கலாம்.

**18. குழந்தைகள் என்னுடைய பாதுகாப்பில் உள்ளனர். என்னை துன்புறுத்தியவரை எதிர்த்து நான் சாட்சி அளித்தால் என்னுடைய குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு என்னிடமிருந்து நீக்கப்படுமா?**

குழந்தைகளை பாதுகாக்கும் பொறுப்பை குடும்பப் பிரச்சனைகளை விசாரிக்கும் நீதிமன்றம் (Family Court) நிர்ணயிக்கும். குற்றவியல் நீதிமன்றம் அல்ல. குற்றவியல் நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கு எவ்வாறு குழந்தைகளை பாதுகாக்கும் உங்களுடைய பொறுப்பை பாதிக்கும் என்பதை உங்களுடைய வக்கீலுடன் பேசி அறிந்துகொள்ளுங்கள்.

**19. என்னைத் துன்புறுத்தியவர் குற்றவாளி என்று நிர்ணயம் செய்யப்பட்டால் குழந்தைகள் அவரைப் பார்க்க அனுமதி கிடைக்குமா?**

குற்றவாளி என்று நிர்ணயிக்கப்பட்டாலும் குழந்தைகள் தங்களுடைய பெற்றோரைப் பார்ப்பதற்கு பொதுவாக தடை ஏதும் இருக்காது. குற்றம் செய்த பெற்றோரைப் பார்ப்பது குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்று நீதிமன்றம் எண்ணினால் அதைத் தடுக்க உத்தரவு அளிக்கும் வாய்ப்பு உள்ளது.

**20. என்னைத் துன்புறுத்தியவர் குற்றவாளி அல்ல, அவர் நிரபராதி என்று நிர்ணயம் செய்யப்பட்டால் நான் என்னையும், என்னுடைய குடும்பத்தையும் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள முடியும்?**

குடும்பப் பிரச்சனைகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில் (Family Court) பாதிக்கப்பட்டவர் எப்பொழுது வேண்டுமானாலும் தனக்கு பாதுகாப்பு தேவை என்று விண்ணப்பம் செய்யலாம்.

**21. "Proof beyond a reasonable doubt" என்றால் என்ன அர்த்தம்?**

ஒருவரை குற்றவாளி என்று நிர்ணயிக்க தகுந்த ஆதாரம் மிகவும் அவசியம். அப்படிப்பட்ட ஆதாரம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கும் பட்சத்தில் ஒருவர் குற்றவாளி என்று நிர்ணயிக்கப்படலாம். சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கும்

ஆதாரத்தை "proof beyond a reasonable doubt" என்று ஆங்கிலத்தில் கூறலாம். ஒருவர் நிரபராதியாக இருக்கலாம் என்று சிறிது சந்தேகம் இருந்தால் கூட அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் நிர்ணயம் செய்யாது.

**22. அதற்கும் "preponderance of evidence" என்பதற்கும் என்ன வித்தியாசம்?**

"Preponderance of evidence" என்பது குடும்பப் பிரச்சனைகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில் (Family Court) உபயோகப்படுத்தும் நீதிமுறை. ஒருவர் குற்றம் செய்திருக்கலாம் என்று சிறிதளவு ஆதாரம் இருந்தாலே நீதிபதி அந்த ஆதாரத்தின் பேரில் தீர்ப்பு வழங்க வாய்ப்பு அதிகம்.

*இந்த கேள்வி பதில் Pro Bono Project of Silicon Valley (https://www.probonoproject.org) மற்றும் Maitri (www.maitri.org) கலந்து உருவாக்கிய ஒரு தகவல் கட்டுரை. இது ஆதாரபூர்வமான சட்ட அறிவுரை அல்ல.*